**மாவனல்ல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 25 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் மாவனல்ல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **கணக்கீடு குறைபாடுகள்** | | | |
| | (i) | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 திகதிற்கு கடன் கொடுத்தோர் மீதி ரூபா 5,967,872 ஆன போதும், நிதிக் கூற்றக்களில் ரூபா 5,697,872 ஆக காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றக்களில் சரி செய்ய வேண்டும். | தவறுதலாக இடம் பெற்றுள்ளதுடன் 2019 ஆண்டின் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| | (ii) | கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்த நிர்மாண ஒப்பந்தக்காரரொருவருக்கு செலுத்த வேண்டிய ரூபா 11,902,981 யினை செலுத்த வேண்டாமென 2008 மற்றும் 2013 ஆண்டுகளில் நீதிமன்றம் தீர்மானித்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையும் அதற்காக நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த சீராக்கம் செய்யது நிதிக் கூற்றுக்களை சரி செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| | (iii) | 2015 ஆண்டின் முத்திரைக் கட்டண அட்டவணை தயாரிப்பதற்கு மீளாய்வாண்டின் செலுத்தப்பட்ட ரூபா 139,200 செலவின தலைப்புக்ளுக்கு | நிதிக் கூற்றக்களை சரி செய்ய வேண்டும். | இவ்வாறான தவறுகள் எதிர் காலத்தில் செய்யப்படாமல் மற்றும் 2019 ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | வரவு வைத்திருந்ததுடன் 2016 ஆண்டுக்காக செலுத்த வேண்டிய ரூபா 53,500 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (iv) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் குறிப்பிட்ட ரூபா 587,289 பெறுமதியான மண் அழுத்தும் உபகரணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர் காலத்தில் சரி செய்து கொள்கிறேன். |

(ஆ) **இணக்கஞ் செய்யப்படாத் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக் கூற்றுக்களில் மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகள்/அறிக்கை மீதிகளிற்கிடையில் ரூபா 279,569 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | மீதிகளை இணக்கஞ் செய்து சரி செய்து கொள்ள வேண்டும். | ஊழியர் கடனை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் வாராந்த சந்தை கட்டணத்தை தீர்ப்பதற்கு தேவையான தகவல்கள் இல்லை. நூலக புத்தக மீதியின் மற்றும் ஆயர்வேத ஔடத இறுப்பு மீதியின் கணக்கீட்டுத் தவரினால் பிழையொன்று ஏற்பட்டுள்ளது. |

(இ) **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2003 ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 152,140 ஆன சம்பளத்தை மீள் நிரப்ப சபைக்கு இயலாமலிருந்தது. | நீண்ட காலம் முதல் நிலவி வரும் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக பிரதான அமைச்சிடம் தொடர்பு கொண்டு பணத்தை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் ஓராண்டை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 59,110,826 ஆனது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமானம் அறவிடுவதற்கு வருமான பிரிவுடன் இணைந்து முன் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் ஓராண்டை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 18,793,555 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | 2019 ஆண்டின் மகா சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானமொன்று பெற்று கணக்கை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 158 உம் 159 பிரிவு மற்றும் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 33 | வீத வரி மற்றும் ஏக்கர் வரி அற்விட சபை நடவடிக்கை எடுக்காமையினால் 2018 திசெம்பர் 31 திகதிற்கு நிலவிய ரூபா 8,670,894 ஆன நிலுவை வீத வரி மீதியினுள் ஒராண்டை விஞ்சிய பழமையான ரூபா 2,784,879 மீதியொன்று ஆனது. | நிலுவை வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒவ்வொறு காலாண்டும் உரிய திட்டத்திற்கமைய சொத்துக்களை தடைசெய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே வருட ஆரம்பத்தில் வீத வரி செலுத்த நடவடிக்கை எடுப்பதால் வட்டம் பெற்றுக் கொள்வது தொடர்பாக மற்றும் கொடுப்பனவு தாமதிக்கும் போது தண்டப்பணம் செலுத்த நேரிடுவது தொடர்பாகவும், சட்டம் பிரகாரம் சொத்துக்களை தடைசெய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் மக்களை அறிவூட்டல் தொடர்ந்து செய்யப்படுகிறது. |
| (ஆ) 1988 இல் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இல் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இல் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் | செல்லுபடியான காலம் 3 ஆண்டுகளை விஞ்சிய வியாபார நிறுவனங்களின் சுற்றால் அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்காததனால் ரூபா 136,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 571(2) | 2007 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை | நிதிப் பிரமாணம் பிரகாரம் | காலம் கடந்த வைப்புகளை மீள் பெற்றுக் கொள்ளுமாறு 2019 மார்ச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலப்பகுதிக்குரிய ரூபா 2,379,682 ஆன 150 வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | 13 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தினூடாக பொது மக்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். அவ்வாறாயினும் எவ்வித நபர்களும் அதற்காக முன்வராததனால் குறித்த பணத்தை வருமானத்திற்கு எடுக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571(3) | 2014 முதல் 2016 ஆண்டு வரை காலத்திற்குரிய வெளித்தரப்பினருக்கு அனுப்ப வேண்டிய கூட்டுத் தொகை 547,843 பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கணக்கு தீர்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ரூபா 1,175 இனை அனுப்ப அங்கீகாரத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள ரூபா 538,876 தொகையை ஓய்வூதிய விதவைகள் அனாதை கணக்கிற்கு ஈடுபடுத்த நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 1646 | சபையின் 23 வாகனங்களுக்குரிய ஓட்ட குறிப்புகளை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல வருடங்கலாக உரிய விதத்தில் ஓட்டக் குறிப்புகள் சமர்பித்திருக்கவில்லை. இவ்வாண்டு சனவரி மாதம் முதல் அனைத்து வாகனங்களினதும் மாதாந்த சுருக்க அறிகைகளை கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபையின் 08 வாகனங்கள் தொடர்பாக எரி பொருள் பரிசீரனை மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த வேலைகளை மேற்கொள்வதற்காக தற்போது வேலை திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 இலக்க உள்ளுராட்ச்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 2 பந்தி | 2009 ஆண்டின் பின் வீத வரி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்காக பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்படவுள்ளனர். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2009 மார்ச் 09 ஆம் திகதிய 01/2009 இலக்க சபரகமுவ உள்ளூராட்ச்சி ஆணையாளரின் சுற்றறிக்கை 1.11 பந்தி | கடையறைகளை துணைக் குத்தகைக்கு வழங்கும் போது ஆரம்பத்தில் அறவிடப்படும் ஒரே தடைவை சேர்க்கும் பணத்திலிருந்து இருபத்தைந்து சதவீத கட்டணமொன்று துணைக் குத்தகைக்காரரிட மிருந்து அறவிட வேண்டிய போதும் 43 கடை யறைகளின் அக் கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் கடையறைகளிற்கு ஆரம்பத்தில் அறவிடப்பட்ட ஒரே தடவையில் சேர்க்கும் பணத்தில் 25% அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 44,599,893 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 47,963,859 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 15,609 | 11,201 | 13,115 | 8,671 | 15,304 | 11,760 | 13,948 | 10,055 |
| (ii) | வாடகை | 32,307 | 26,773 | 25,194 | 5,156 | 27,859 | 26,397 | 23,144 | 3,575 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,400 | 682 | 682 | - | 2,675 | 2,350 | 2,718 | - |
| (iv) | ஏனைய வருமானம | 129,005 | 143,029 | 118,530 | 93,067 | 108,712 | 93,200 | 52,868 | 102,553 |

**2.2.2 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த நிலுவை கடையறை வாடகை ரூபா 3,307,536 ஆன தொகையினுள் ஹின்குல வியாபாார கட்டிடத் தொகுதியின் 1999 முதல் 2014 வரை 25 கடையறைகளுக்காக பெற வேண்டிய ஒரே தடவை சேர்க்கும் பணம் ரூபா 50,350 யினை மற்றும் ஹெம்மாதகம வியாபார கட்டிடத் தொகுதியின் 07 கடையறைகளுக்காக பெற வேண்டிய ஓராண்டை விஞ்சிய கடை வாடகை ரூபா 1,607,775 ஆனது. | நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். | ஹின்குல வியாபாார கட்டிடத் தொகுதியில் மேலும் ரூபா 50,350 அறவிட வேண்டியுள்ளதுடன் ஹெம்மாதகம வியாபார கட்டிடத் தொகுதியில் நிரமானங்கள் நிறுத்தப்பட்டுள்ளதனால் கீ மனியை அறவிட முடியாதுள்ளது. இது தொடர்பாக மகாசபையை அறிவூட்டி முன் நடவடிக்கை மேற்கொள்கிறேன். |

**2.2.3 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த ஏனைய வருமானம் நிலுவை மீதி ரூபா 2,308,318 ஆனதுடன் மீளாய்வாண்டிற்குரியதாக 16 நிலையான விளம்பர பலகைகளிலிருந்து ரூபா 344,240 மற்றும் தற்காலிக 15 விளம்பர பலகைகளிலிருந்து ரூபா 10,800 தொகை அறவிட்டிருக்கவில்லை. | வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். | நிலுவை விளப்பரப் பலகை கட்டணம அறவிட சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க துணைச் சட்டமொன்று தயாரித்து அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் தற்காலிக விளம்பரப் பலகைகளிற்காக கட்டணம் அறவிட சட்ட ரீதியான முறையொன்று இல்லாததனால் குறித்த விளம்பர பலகைகள் 2019 சனவரி 23 திகதி களற்றி அகற்றப்பட்டுள்ளது. |

**2.2.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பண ரூபா 8,412,870 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 76,781,068 ஆனதுடன் ஓராண்டை விஞ்சிய மீதி | வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | முத்திரைக் கட்டணத்திற்காக ரூபா 239,753 ஆன தொகை 2019 ஏப்ரில் 05 திகதி கிடைத்துள்ளது. எஞ்சிய தொகையையும் அறவிடுவதற்காக மாகாண சபைக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

முறையே ரூபா 4,501,875 மற்றும் ரூபா 46,127,128 ஆனது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **துணைச் சட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 04 பிரதான விடயங்களை மேற்கொள்வதற்கு துணைச்சட்டம் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 திகதி வரையும் இரண்டு காரணங்களுக்காக மாத்திரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தன. | தொடர்புடைய விதத்தில் துணைச் சட்டங்களை விதிக்க வேண்டும். | கழிவு பொருள் முகாமை மீதான துணைச் சட்டத்தை தளுவ தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது. |

(ஆ) **செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த திட்டத்தின் காட்டப்பட்டுள்ள 06 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடலுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

(இ) **கழிவுப் பொருள் முகாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை கழிவு பொருள் முகாமைத்துவதற்காக மூலதன செலவினம் ரூபா 13,558,532 மற்றும் மீண்டுவரும் செலவினம் ரூபா 169,514,035 மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஈட்டப்பட்டிருந்த வருமானம் ரூபா | சுற்றாடல் பாதிப்பை குறைக்கும் வகையில் கழிவு பொருட்களை முகாமை செய்து வருமானம் ஈட்ட வேண்டும். | ஒன்று சேறும் கழிவுப் பொருட்களை பிரித்து உக்கடையும் பொருட்ககளை கொம்போஸ்ட் முறையினூடாக பசளை விற்பனையினால் ஓரளவு வருமானத்தை பெற்றுக் |

| | | |
|---|---|---|
| 2,415,786 மாத்திரமே. | | கொள்வதுடன, உக்கலடையாத கழிவுகளை விற்பதன் மூலமும் ஓரளவு வருமானம் பெறப்படுகிறது. |

(ஈ) **சுற்றாடல் பிரச்சினை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மலசல கழிவு பொருட்கள் வெளியிடுவதற்காக உரிய இடமொன்று இல்லாததனால் 2018 ஆண்டின் போது மலசல சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது. | பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து மக்கள் சேவைகளை மேற்கொள்ள வெண்டும். | மலசல கழிவுகளை வெளியிட இது வரை சபைக்கு உரிய இடமொன்று இல்லை. மலசல கழிவுகளை திறந்த வெளியல் இடுவதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் மலசல கழிவுகளை பெறல் இடம் பெறுவதில்லை. |

(உ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2019 பெப்ரவரி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகால திட்டங்கள் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பான நீண்டகால திட்டங்கள் எதிர்காலத்தில் தயாரிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 149 இற்கும் உள்ளவாறான ஆளணி 117 இற்குமிடையில் 17 பதவி வகைகளில் 33 வெற்றிடங்கள் மற்றும் ஓர் மிகையும் இருந்தது. இதற்கு மேலதிகமாக 07 அமைய ஊழியரகள் மற்றும் சேவை ஒப்பந்தந்தின் மீது 38 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டியதுடன் ஆளணியை உரிய முறையில் முகாமை செய்து கொள்ள வேண்டும். | நகரிற்கு புலம்பெயரும் மக்கள் தொகை அதிகமாகையால் நாட் சம்பள அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்க்க வேண்டி எற்பட்டுள்ளதால் பதவி அனவினை அதிகரித்துக் கொள்ள மாகாண சபையிடம் கோரப்பட்டுள்ளது. |
| (ஆ) | தீ அனைக்கும் அலகுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட 05 பதவிகளில் ஊழியர்கள் எண்ணிக்கை 20 ஆன போதும், ஓர் பதவிக்காக அமைய அடிப்படையில் 07 பேர் சேர்க்கபட்டிருந்ததுடன் தீ அனைக்கும் ஊழியர் சட்டவாக்க கோவை பிரகாரம் ஆட்சேர்பதை மேற்கொண்டு தீ அனைக்கும் பிரிவை முறையாக நிறுவ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீ அனைக்கும் பிரிவை முறையாக நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீ அனைக்கும் அலகுகின் பதவிகள் எண்ணிக்கை மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதுடன் அவர்களை சேவைக்கட்படுத்துவதற்கான விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்ட மாகாண சபைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2006 மற்றும் 2007 ஆண்டுகளில் ஓய்வு பெற்ற மற்றும் சேவையை விட்டுச்சென்ற 03 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 64,489 ஆனது. | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணம் அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவனல்ல பேருந்து தரிப்பிட பொது மலசல கூடத்தின் கிழிவுகளுடன் நீர் வெளியே கசிவதனால் 2014 ஆண்டு முதல் மலசல கூடம் மூடி வைக்கப்பட்டிருப்பதனால் பொது மக்களுக்கு சேவை வழங்குவதற்கு முடியாமலுள்ளது. | பொது மக்கள் தேவைபாட்டை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இது தொடர்பாக கவனம் செலத்தப்படும். |

**3.4 சொத்துக்கள் முகாமை**

3.4.1 **விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 01 ஆண்டு முதல் 09 ஆண்டு வரையான காலமொன்று விளைவற்றதாக இருந்த ரூபா 2,143,860 பெறுமதியான 04 வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது வேறு உரிய நடவடிக்கை எடுக்க இயலாமலிருந்தது. | சொத்துக்களை பயனுள்ளதாக பயன்படுதடுத்த வேண்டும். | வாகனங்களை ஏலவிற்பனை செய்யவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) 2017 ஆண்டின் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் கழிவுப் பொருள் முகாமைத்துவ கருத்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த பிரேல் இயந்திரம் பயன்படுத்தப்படடிருக்கவில்லை. | சொத்துக்களை பயனுள்ளதாக பயன்படுதடுத்த வேண்டும். | எதிர் காலத்தில் இது தொடர்பாக விடயங்களை கண்டறிந்து நடவடிக்கை எடக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பாதீட்டினால் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த 39 செலவின விடயங்களில் ரூபா 44,909,000 ஆன மொத்த ஒதுக்கீடும் மற்றும் 20 செலவின விடயங்களில் ரூபா 23,342,965 ஆன ஒதுக்கீட்டின் 85 சதவீதம் முதல் 99 இடையில் கூட்டுத் தொகை ரூபா 68,251,965 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மிக்க நடைமுறை சாத்தியமான பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடக்க வேண்டும். | உள்ளக கட்டுப்பாட்டு முறைகளினூடாக செலவினங்களை சரியாக கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றுகிறேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம நடாத்தப்பட செயற்பட வேண்டும். | 2019 ஆண்டின் மே மாதத்தினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |